# ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் ஸ்டொய்க்கிய மெய்யியலின் செல்வாக்கு - ஒரு மெய்யியல் நோக்கு

# Exploring the Influence of Stoic Philosophy on Early Christian Thought and Actions: A Philosophical Perspective

Marimuthu Prahasan
Senior Lecturer in Philosophy, Dept of Philosophy and Value Studies,
Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
Email: prahasankm@esn.ac.lk

## Abstract

This research paper delves into the assimilation of Stoic philosophical principles into the early Christian teachings and actions of Saint Paul, particularly in the context of Roman society. By examining the extent to which Stoic philosophy influenced Saint Paul's approach to establishing Christianity amidst a predominantly Stoic culture, this study employs a qualitative methodology based on secondary data analysis. Key questions guiding this investigation include the direct adherence to Stoic guidelines, the modifications made to accommodate Christian beliefs, and the factors contributing to the ascendancy of Christianity over Stoicism. Through an academic lens, this paper aims to illuminate the intricate interplay between ancient philosophical traditions and the burgeoning Christian faith. Religious and philosophical doctrines have long provided frameworks for human flourishing, with religions relying on faith and philosophies emphasizing reason. In the evolution of Western thought, Stoicism emerged as a prominent philosophical tradition, spanning five centuries and exerting considerable influence within Greek and Roman societies. Notably, Stoic principles permeated the fabric of Roman culture, serving as a moral compass and guiding individuals towards virtuous living. However, the advent of Christianity, championed by figures like Saint Paul, precipitated a transformative shift in the ideological landscape. This paper seeks to unravel the extent to which Stoic philosophy informed Saint Paul's early Christian endeavors, shedding light on the assimilation, adaptation, and ultimate triumph of Christian doctrine over Stoic precepts. Employing a qualitative approach grounded in secondary data analysis, this research investigates the nuanced intersection of Stoic philosophy and early Christian thought. Drawing upon historical texts, scholarly interpretations, and theological analyses, the study discerns patterns of influence, identifies areas of divergence, and elucidates the socio-cultural dynamics underpinning the rise of Christianity vis-à-vis Stoicism. By rigorously interrogating primary and secondary sources, this inquiry aims to construct a comprehensive understanding of the philosophical synthesis inherent in Saint Paul's missionary activities. Central to this examination is the delineation of Stoic principles evident in Saint Paul's teachings and actions. Through a comparative analysis, the paper elucidates instances of direct adherence to Stoic guidelines as well as modifications necessitated by the infusion of Christian theology. Moreover, the research probes into the underlying reasons why Stoic philosophy, despite its enduring legacy, faltered in the face of Christianity's ascendancy. Factors contributing to this ideological transition are scrutinized, encompassing theological doctrines, socio-political developments, and cultural transformations within the Roman Empire. In conclusion, this research paper illuminates the intricate interplay between Stoic philosophy and early Christian thought, particularly as embodied in the missionary efforts of Saint Paul. By tracing the assimilation, adaptation, and eventual triumph of Christianity over Stoicism within the Roman milieu, this study underscores the dynamic nature of intellectual exchange and the transformative power of religious innovation. Through a qualitative exploration rooted in scholarly discourse, the paper advances our understanding of the historical forces shaping the trajectory of Western civilization.

**Keywords**: Christianity, Stoic philosophy, Saint Paul, Roman Empire

**ஆய்வுச் சுருக்கம்**

சமய வழிகாட்டல்களும், மெய்யியல் வழிகாட்டல்களும் மனிதர்கள் மகிழ்ச்சியாக நல்வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளை முன்வைப்பதை இலக்காகக் கொண்டவையக உள்ளன. சமயங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படுகின்ற அதேவேளையில் மெய்யியல் பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக உள்ளது. ஆதி கிரேக்க காலத்தில் மேலைத்தேய மெய்யியல் தோன்றியது முதற்கொண்டு தற்காலம் வரையில் பல்வேறு மெய்யியல் பள்ளிகள் மனித நல்வாழ்க்கை குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. இவற்றில் ஐநூறு வருடகால பாரம்பரியத்தைக் கொண்ட ஸ்டொய்க்கிய மெய்யியல் மரபு முக்கியமான ஒன்றாகும். கிரேக்க, உரோமன் கலாசார பின்னணியில் அக்கால மக்களது ஆன்மாவை குணமாக்கும் ஒரு முறையாக, வாழ்க்கைமுறை பற்றிய வழிகாட்டியாக இந்த மரபு செயற்பட்டுள்ளது. உரோமப்பேரரசு கிறிஸ்தவத்தை உத்தியோகபூர்வமான சமயமாக ஏற்றுக்கொண்டு பிரகடனப்படுத்தும் வரையிலும் ஸ்டொய்க்கிய மெய்யியலே உரோமன் மக்களது வாழ்க்கை வழிகாட்டியாக இருந்துள்ளது. இந்த காலப்பகுதியிலேயே இயேசு கிறிஸ்துவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு புனித பவுல் முதலான இறைத்தூதர்கள் கிறிஸ்தவசமயத்தை பரப்புகின்ற செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக யூதர்கள் அல்லாதவர்களிடத்தில் கிறிஸ்தவத்தை கொண்டு சேர்த்ததில் புனித பவுலின் வகிபாகம் முக்கியத்துவம் கொண்டதாகும். புராதன பேகனிய சமயத்தையும், ஸ்டொய்க்கிய வழிகாட்டல்களையும் பின்பற்றிய உரோமன் சமூகத்தை கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதில் இவர் மிகப்பெரும் பங்காற்றியுள்ளார். இதன்பொருட்டு பயன்படுத்தப்பட்ட நுட்பங்கள் கவனத்திற்குரியவையாகும். குறிப்பாக ஏற்கனவே அங்கு ஒரு வாழ்க்கை முறையாக நிலைபெற்றிருந்த ஸ்டொய்க்கிய மெய்யியலின் வழிகாட்டல்களையும், முறையியல்களையும் உள்வாங்கிக்கொண்டு அதனை கிறிஸ்தவ இறையியலுடன் இணைத்து இவர் கிறிஸ்தவ போதனைகளை மேற்கொண்டுள்ளார். கிறிஸ்தவ சமயத்தை உரோமன் சமூகத்தில் நிலைநிறுத்தும் முயற்சியில் புனிதர் பவுலின் ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகளும், செயற்பாடுகளும் எந்தளவிற்கு ஸ்டொய்க்கிய மெய்யியலை உள்வாங்கிய வகையில் அமைந்திருந்தன என்பதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவது இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது. இவ்வகையில் இந்த ஆய்வுக்கட்டுரையானது பண்புசார்ந்ததாக, இரண்டாம்நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எத்தகைய வழிகாட்டல்கள் உள்ளன உள்ளபடி பின்பற்றப்பட்டுள்ளன? எத்தகைய வழிகாட்டல்கள் மாற்றத்துடன் பின்பற்றப்பட்டுள்ளன? கிறிஸ்தவத்திற்கு எதிராக ஸ்டொய்க்கிய மெய்யியல் நிலைபெற முடியாமல் போனமைக்காக காரணங்கள் எவை? ஸ்டொய்க்கியத்தை விஞ்சி கிறிஸ்தவம் நிலைபெறுவதற்கு பங்களிப்பு செய்த விடயங்கள் எவை? என்பன இந்த ஆய்வை முன்நகர்த்தும் வினாக்களாக உள்ளன.

**திறவுச்சொற்கள்:** கிறிஸ்தவம், ஸ்டொய்கிய மெய்யியல், புனிதர் பவுல், உரோமப் பேரரசு

# ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் ஸ்டொய்க்கிய மெய்யியலின் செல்வாக்கு - ஒரு மெய்யியல் நோக்கு

## அறிமுகம்

கெலனிய உரோமன் கலாசாரத்தில் மனித நல்வாழ்க்கையில் மெய்யியல் வழிகாட்டல்கள் தனித்துவமான இடத்தினை பெற்றிருந்தன. செல்வாக்குமிகு மெய்யியல் பள்ளிகள் செல்வந்தமான மனிதர்களினால் போசிக்கப்பட்டன. அரசின் அங்கீகாரத்துடன் அரச நிதி ஆதரவினையும் பெற்றுக்கொண்டிருந்தன. பல்வேறு சிறிய மெய்யியல் பள்ளிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு மக்களை இணைத்துக்கொண்டு செயற்பட்டன. நவபிளேட்டோனியம், அரிஸ்டோட்டலிசம், நவபைதகரசியவாதம், ஸ்கெப்டிசம், ஸ்டொய்க்கிய மெய்யியல் என்பன இவற்றுக்கான சில உதாரணங்களாக உள்ளன. ஒவ்வொன்றும் தனித்துவமான நம்பிக்கைகள், நெறிமுறைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றினைக் கொண்டிருந்தன. குறிப்பாக ஸ்டொய்க்கிய மெய்யியல் அரசின் தத்துவம் என்ற சிறப்பினைப் பெற்றிருந்தது. இது சமகால சமூகத்தில் சமயங்கள் பெறும் இடத்திற்கு நிகரான ஒரு

அந்தஸ்தைப் பெற்றிருந்தது. அது மெய்யியல் மாத்திரம் என்பதாக அல்லாமல் ஒரு வாழ்க்கை முறையாகவே அணுகப்பட்டது (Grant, 1915: 276). ஆன்மாவை துாய்மையாக்கும் ஒன்றாக நோக்கப்பட்டது. அதாவது இம்மெய்யியலின் நோக்கம் எவ்வாறு நல்வாழ்க்கை வாழ்வது என்ற போதனையினை வழங்குவதாக இருந்தது. வாழ்க்கைக்கு ஒழுக்கம் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. ஒழுக்கம் ஒரு அறிவாக கணிக்கப்பட்டது. அது கற்றுக்கொள்ளப்படக்கூடியது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஒழுக்கத்தை கற்றுக்கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் பகுத்தறிவுத்திறன் அவசியமானதாக குறிப்பிடப்பட்டது. பாரம்பரிய நம்பிக்கைகள் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு அறிவார்ந்தமான ஏற்றுக்கொள்ளல்களுடன் வாழ்க்கை வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவது ஊக்குவிக்கப்பட்டது. நம்பிக்கையை விட, உணர்வெழுச்சிகளை விட அறிவுத்தெளிவும், பகுத்தறிவான நடத்தையுமே முக்கியத்துவப்படுத்தப்பட்டன. குறிப்பாக இவ்விடயங்கள் உரோம உயர்குடியினராலும், கற்றறிந்த சமூகத்தினாலும் அதிகம் உள்வாங்கப்பட்டிருந்தன (Ferguson, 1993: 299-347).

உரோமப் பேரரசர் மார்க்கஸ் அரேலியஸ் ஸ்டொய்க்கிய மெய்யியல் மரபில் உத்தியோகபூர்வமான இறுதி மெய்யியலாளராக அடையாளப்படுத்தப்படுகின்றார். கி.பி 180இல் இவருடைய இறப்பு இம்மெய்யியலின் முடிவின் ஆரம்பமான கொள்ளப்படுகின்றது. இவ்வாறு ஸ்டொய்க்கிய மெய்யியலின் செல்வாக்கு குறைவதற்கு தொடர்ந்து வந்த காலங்களில் உரோம பேரரசின் வீழ்ச்சியும், கிறிஸ்தவ சமயத்தின் பரவலும் காரணமாக அமைந்திருந்தன. குறிப்பாக கி.பி 395 இல் பேரரசர் முதலாம் தியோடோசியசின் (Theodosius I) மரணத்தின் பின்னர் உரோமப்பேரரசு மேற்கு, கிழக்கு என்று இரண்டாக பிரிவடைந்து ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இம் மெய்யியலுக்கான அரசின் ஆதரவு பொதுத்தளத்தில் இல்லாமலாக்கப்பட்டிருந்தது (Duignan, 2011: 20). அத்துடன் கிறிஸ்தவ சமயத்தின் பரவல் வெகுஜனமக்கள் தங்களது வாழ்க்கைக்கான வழிகாட்டல்களுக்காக மெய்யியலை பின்பற்றிய நிலையினை மாற்றியமைத்திருந்தது. ஸ்டொய்க்கிய மெய்யியலாளர்களில் ஒருவரான செனேகாவின் காலத்தில் புனிதர் பவுல் உரோமிற்கு கிறிஸ்தவ போதனைகளை மேற்கொள்வதற்கு சென்றிருந்த காலத்தில் இருந்து அதன் பரவல் ஆரம்பித்திருந்தது. இதன் வளர்ச்சியில் மனிதர்களை நெறிப்படுத்துகின்ற செயற்பாடுகள் மெய்யியலாளர்களிடமிருந்து கிறிஸ்தவ போதகர்களினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இதில் பகுத்தறிவினைவிட நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டல்கள் வெகுஜனமக்களால் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. கிறிஸ்தவ ஒழுக்கவியலின் தோற்றம் தெய்வீக இருப்புடன் தொடர்புபடுத்தப்பட்டமை அதன் அதிகாரத்திற்கு வலுவான அடிப்படையை வழங்கியது (Colish, 1985: 361). உரோமன் சமூகத்தில் ஆரம்பகட்டத்தில் கிறிஸ்தவ வழிகாட்டல்களை ஏற்றுக்கொண்டவர்களாக கீழ்த்தட்டு மக்களே இருந்தனர். குறிப்பாக அடிமைகளும், அடிமைகளாக இருந்து விடுதலை பெற்றவர்களும் (Slaves and freed men) இதில் உள்ளடங்குகின்றனர் (Thorsteinsson, 2010: 80).

ஒரே வகையான அரசியல், சமூக சூழ்நிலைகளில் உரோமன் சமூகத்தில் வாழ்ந்த மக்களை இலக்காகக் கொண்டிருந்த வகையில் ஸ்டொய்க்கிய வழிகாட்டல்கள் பல கிறிஸ்தவ போதனைகளுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தன. கிறிஸ்தவ போதனையாளர்கள் உரோமன் சமூகத்துடன் இணைந்து வாழ்ந்து அங்கு நிலைபெற்றிருந்த வாழ்க்கை முறைகளை நன்கு உள்வாங்கிக்கொண்டு தங்களது சமயத்தை பரப்பும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இவற்றில் முக்கியமான ஒன்று அரசினது தத்துவம் என்ற சிறப்புக்குரியதாக இருந்த ஸ்டொய்க்கிய மெய்யியலின் வழிகாட்டல்களை உள்வாங்கிக்கொண்டு செயற்பட்டமையாகும். இவ் வகையில் குறித்த இந்த ஆய்வுக்கட்டுரையானது புனித பவுல் தன்னுடைய ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் எவ்வாறு ஸ்டொய்க்கிய மரபினை உள்வாங்கிக்கொண்ட வகையில் மேற்கொண்டார் என்பதனை கண்டறிந்து வெளிப்படுத்துவதாக உள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Cochran (2022) என்பவர் எழுதியுள்ள 'ஸ்டொய்க்கிய மெய்யியலும் கிறிஸ்தவ ஒழுக்கமும்' (Stoicism and Christian Ethics) எனும் ஆய்வுக்கட்டுரை கிறிஸ்தவ ஒழுக்கவியல் பல்வேறு விடயங்களில் ஸ்டொய்க்கிய தத்துவத்தை உள்வாங்கிக்கொண்டு விருத்தி செய்யப்பட்டது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அண்மைக்காலத்தில் புலமைத்துவ செயற்பாடுகளில் இரண்டு தரப்பிலும் உள்ள வேறுபாடுகள் எடுத்துக்காட்டப்பட்டு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்னைய கருத்து விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றது. இந்த நிலையில் எவ்வாறு கிறிஸ்தவ சமயம் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை ஸ்டொய்க்கியத்திற்கு எதிராக முன்வைத்திருப்பினும் அவை எவ்வாறு அடிப்படையில் ஸ்டொய்க்கியத்தில் இருந்து விருத்தி செய்யப்பட்டவையாக உள்ளன என்பதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. Karamanolis (2011) எழுதியுள்ள 'ஆரம்பகால கிறிஸ்தவ மெய்யியல்' (The Philosophy of Early Christianity) எனும் நூல் எவ்வாறு பல்வேறு கிறிஸ்தவ போதகர்கள் கிறிஸ்தவ ஒழுக்கவியலை விருத்தி செய்கின்றபோது செந்நெறிக்காலத்தில் இருந்து நிலைபெற்றிருந்த பல்வேறு மெய்யியல் பள்ளிகளின் சிந்தனைகளை உள்வாங்கி செயற்பட்டனர் என்பதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. Rasimus, Pederson (2010) ஆகியோர் தொகுப்பாசிரியர்களாக வெளியிட்டுள்ள 'ஆரம்பகால கிறிஸ்தவத்தில் ஸ்டொய்க்கியம்' (Stoicism in Early Christianity) எனும் நூல் பல்வேறு புராதன மெய்யியல் சிந்தனைகள் பழைய ஏற்பாட்டில் இருந்து கி.பி இரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரையில் பல்வேறு நிலைகளில் கிறிஸ்தவ சமயத்திற்குள் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன என்று விரிவாக எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக உள்ளது. இதில் 'ஆரம்ப கிறிஸ்தவத்தில் ஸ்டொய்கிய மெய்யியல்' எனும் கட்டுரை மிகவும் விரிவான வகையில் புனிதர் பவுலின் சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் ஸ்டொய்க்கிய ஒழுக்கவியலின் தாக்கம் இருந்துள்ளது

என்பதனை வெளிப்படுத்துகின்றது. மேலும் நவபிளேட்டோனிய சிந்தனைகளைவிட ஸ்டொய்க்கிய சிந்தனைகள் மிகவும் ஆழமான ஒழுக்கவியல் வழிகாட்டல்களைக் கொண்டுள்ளன எனவும் அவை நாளாந்த வாழ்க்கைக்கான பிரயோகத்தைக் கொண்டுள்ள வகையில் கிறிஸ்தவத்திற்குள் மிகவும் எளிதாக உள்வாங்கப்படுவதற்கு காரணமாக அமைந்திருந்தன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த ஆய்வுக்கட்டுரை ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் எவ்வாறு ஸ்டொய்க்கிய மெய்யியல் வழிகாட்டல்கள் செல்வாக்கு செலுத்தியுள்ளன என்பதனை மிகவும் விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதுடன் குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஸ்டொய்க்கியம் ஒரு வாழ்க்கை வழிகாட்டல் மரபாக செல்வாக்குச் செலுத்தமுடியாமைக்கான காரணங்களையும் ஆராய்ந்து வெளிப்படுத்துகின்ற வகையில் மேற்குறித்த ஆய்வுகளில் இருந்து தனித்துவமானதாகவும், அவசியமானதாகவும் அமைந்துள்ளது. மேலும் இவ் விடயம் தொடர்பான ஆய்வுகள் பெருமளவில் ஆங்கில மொழியிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தமிழ்மொழிமூலமான புலமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற இளம் ஆய்வாளர்களுக்கு இந்த ஆய்வுக்கட்டுரை சமயங்களது ஆரம்பநிலை தொடர்பில் ஆராய்ந்து அறிந்துகொள்வதற்குரிய ஆர்வத்தையும், வாய்ப்பையும் உருவாக்கும் தன்மையினையினையும் கொண்டுள்ளது. அவ்வகையில் தமிழ்மொழியில் இதுபோன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்கு இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வின் வினாக்கள், ஆய்வு முறையியல்**

சமயமும், மெய்யியலும் மனிதர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கான வழிகாட்டல்களை முன்நிலைப்படுத்துபவையாக உள்ளன. வரலாற்று நோக்கில் சமயங்களும் சரி, மெய்யியல் மரபுகளும் சரி பிற மரபுகளை விமர்சித்தும், எதிர்த்தும், உள்வாங்கிக்கொண்டும் தங்களை நிலைநிறுத்திக்கொண்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ சமயம் அறிமுகமாகி குறுகிய காலத்திற்குள் அதற்கு முன்னர் நீண்டகாலம் நிலைபெற்றிருந்த வாழ்க்கை வழிகாட்டல் முறைகளை எதிர்கொண்டு எவ்வாறு தன்னை நிலைநிறுத்திக்கொண்டது என்பது ஆய்வுக்குரிய பிரச்சினையாக உள்ளது. இவ்வகையிலேயே ஐநூறு வருடகால பாரம்பரியத்துடன், மனித நல்வாழ்க்கைக்கான வழிகாட்டலாக நிலைநிறுத்தப்பட்டிருந்த ஸ்டொய்க்கிய மெய்யியலை வீழ்த்தி தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்காக கிறிஸ்தவ இறையியலாளர்கள் பின்பற்றிய முறைகள் எவை என்பதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாக உள்ளது. இந்த நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட முன்னாய்வில் கிரேக்க-உரோமன் சமூகத்தில் நிலைபெற்றிருந்த ஸ்டொய்க்கிய மெய்யியலின் கூறுகள் புனித பவுல் முதலான சமய பிரச்சாரகர்களினால் உள்வாங்கப்பட்டு அவை கிறிஸ்தவ மயப்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதனை அறிந்துகொள்ள முடிந்தது. இந்த அடிப்படையில் ஸ்டொய்க்கிய மெய்யியலின் எத்தகைய வழிகாட்டல்கள் உள்ளன உள்ளபடி

பின்பற்றப்பட்டுள்ளன? எத்தகைய வழிகாட்டல்கள் மாற்றத்துடன் பின்பற்றப்பட்டுள்ளன? கிறிஸ்தவத்திற்கு எதிராக ஸ்டொய்க்கிய மெய்யியல் நிலைபெற முடியாமல் போனமைக்காக காரணங்கள் எவை? ஸ்டொய்க்கியத்தை விஞ்சி கிறிஸ்தவம் நிலைபெறுவதற்கு பங்களிப்பு செய்த விடயங்கள் எவை? முதலானவை இந்த ஆய்வை முன்நகர்த்திச் செல்லும் வினாக்களாக அமைந்துள்ளன. குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் பல வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை ஆய்வின் உள்ளடக்கப்பகுதியில் விரிவாக உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்பு சார்ந்ததாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலக்கிய மீளாய்வின்போது அவதானித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ சமய நூல்கள், புனித பவுலின் கடிதங்கள், பிரசங்க குறிப்புக்கள் என்பன இணையதளத்தில் பெறப்பட்டு ஒப்புநோக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

**ஸ்டொய்க்கிய மெய்யியலின் இறுதிக்காலமும் கிறிஸ்தவத்தின் ஆரம்பமும்**

கி.பி முதலாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் உரோம சாம்ராஜ்ஜியத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சமகாலத்தில் வாழ்ந்தவர்களாகவே ஸ்டொய்க்கிய மெய்யியலாளர் செனேகாவும், இயேசு கிறிஸ்துவும் அறியப்படுகின்றனர். செனேகாவின் காலம் கி.பி 4 தொடக்கம் கி.பி 64 வரையாகவும், இயேசுவின் காலம் கி.பி 4 அல்லது 6 தொடக்கம் கி.பி 36 வரையாகவும் குறிப்பிடப்படுகின்றது. செனேகா உரோமின் ஆட்சியின் கீழ் இருந்த ஸ்பெயின் பிறந்து, உரோமில் செயற்பாடுகளை மேற்கொண்டவராக இருந்துள்ளார். இயேசுவின் பிறப்பும், செயற்பாடுகளும் உரோமின் ஆட்சியின் கீழ் இருந்த பெத்தலகேமை மையமாகக் கொண்டிருந்தன. இயேசு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டபோது உரோமின் பேரரசராக திபேரியஸ் சீசர் (Tiberius Caesar 14 -37) இருந்துள்ளார். இக் காலத்திலேயே செனேகா தன்னுடைய அரசியல் பணிகளை உரோமில் ஆரம்பித்துள்ளார். உரோமின் சார்பில் பெத்தலகேம் பிரதேசத்திற்கு ஆளுனராக செயற்பட்ட பொண்டியஸ் பிளேட் (Pontius Pilate) என்பவரே இயேசுவின் தண்டனைக்கு உத்தரவிட்டவராக அறியப்படுகின்றார். தற்போது உரோமிற்கும் பெத்தலகேமிற்கும் இடையிலான தரைவழிப்பாதை ஏறத்தாழ 4,055 கிலோ மீற்றர்களாக உள்ளன. கடல்மார்க்கமான பயணம் இதனைவிட குறைவான தூரத்தைக் கொண்டது (Google distance map calculator). செனேகாவும், இயேசு கிறிஸ்துவம் ஒருவருக்கொருவர் அறிமுகத்தைக் கொண்டிருந்தமைக்கு எந்த ஆதாரங்களும் இல்லை.

ஆனால் இயேசுவின் மரணத்தின் பின்னர் ஆரம்பகால கிறிஸ்தவ இறைத்தூதராக குறிப்பிடப்படுகின்ற புனித பவுல் (*Apostle* St.Paul) உரோமிற்கு விஜயம் செய்துள்ளதாக அறியப்படுகின்றது (Acts of the Apostles: 28.13). இது கிறிஸ்தவ போதனைகளை பரப்புகின்ற முயற்சியின் ஒரு அங்கமாகும். இவர் பிலிப்பியன்கள், கலாட்டியன்கள், மற்றும் உரோமன் (Philippians, Galatians, Romans) ஆகிய சமூகத்தினருக்கு எழுதியுள்ள கடிதங்ககள் கிறிஸ்தவ

ஒழுக்க போதனைகளை வெளிப்படுத்துபவையாக உள்ளன (Thorsteinsson, 2010: 15). இது செனேகா அரசியலில் செல்வாக்கு மிக்கவராக செயற்பட்ட பேரரசன் நீரோவின் ஆட்சிக்காலத்தில் (கி.பி 54 – கி.பி 68) இடம்பெற்றுள்ளது. இக் காலத்திலேயே முசோனியஸ் ரூபஸ், எபிக்டெடஸ் ஆகிய ஸ்டொய்க்கிய மெய்யியலாளர்களும் ஸ்டொய்க்கிய ஒழுக்கவியலை நடைமுறையில் பின்பற்றுவதற்குகந்த வகையிலான வழிகாட்டல்களை மேற்கொண்டிருந்தனர் (Sandbath: 1989: 19). புனித பவுல் இனுடைய போதனைகள் உரோமில் வாழ்ந்த யூதர்கள் உள்ளடங்களாக பலரை கிறிஸ்தவத்தினை பின்பற்றுபவர்களாக மாற்றியது. இதுவே உரோம கிறிஸ்தவத்தின் ஆரம்பமாக அமைந்திருந்தது (Acts of the Apostles: 28.23-24). உரோமிற்கு விஜயம் செய்வதற்கு முன்னர் பவுல் உரோம பேரரசின் ஆளுகையில் இருந்த கிரேக்கத்திற்கு சென்றிருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. கி.பி 51 இல் இவருக்கு எதிரான முறைப்பாடு ஒன்று கிரேக்க பிராந்தியங்களில் ஒன்றான அசாஇயா (Achaea) இல் யூதர்களினால் மேற்கொள்ளப்பட்டதாக பதிவாகியுள்ளது. ஆனால் அதன் ஆளுநராக செயற்பட்ட செனேகாவின் சகோதரர்களில் ஒருவரான லூசியஸ் யூனியஸ் கல்லியோ அன்னேனஸ் (Lucius Junius Gallio Annaeanus) இனால் அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இது கிறிஸ்தவர்களுக்கு ஆதரவான ஒரு செயற்பாடாகவும் வரலாற்றில் பதிவாகியுள்ளது (Acts of the Apostles 18:12–17, & Wilson, 2014: 217).

செனேகாவும், பவுலும் சமகாலத்தவர்களாக இருந்தமை பிற்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் முயற்சிகளில் நூதனமாக பயன்படுத்தப்பட்டுள்ளமையினை அறிய முடிகின்றது. கி.பி மூன்றாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயம் ஏற்கனவே நிலைபெற்றிருந்த பலதெய்வ வணக்கத்தை / பேகனிய (Paganism) சமயத்தை பின்பற்றியவர்களை மதமாற்றம் செய்யும் முயற்சிகளில் தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருந்தது. இதன்போது இவர்கள் இருவருக்கும் இடையில் நட்புறவு காணப்பட்டது என்பதனை வெளிப்படுத்தும் வகையில் பல கடிதங்கள் ஆதாரங்களாக காட்டப்பட்டன. ஆனால் அவை போலியானவை என பிற்கால ஆராய்ச்சியாளர்களினால் நிரூபிக்கப்பட்டுள்ளது (Colish, 1985: 16 & Cochran, 2022: 5). அத்துடன் பேகன் சமயத்தவரான செனேகா கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக்கொண்டார், இறப்பிற்கு முன்னர் புனித நீரில் மூழ்கி ஞானஸ்தானம் பெற்றுக்கொண்டார் என்று குறிப்பிடப்பட்டது. இவ்விடயங்கள் உரோம அரசியலில் செல்வாக்குடன் வாழ்e;j செனேகாவை பேகனிசத்தின் பிரதிநிதியாக்கி அவர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார் என்பதனை வெளிப்படுத்தி பேகனிச ஆதரவாளர்களை கிறிஸ்தவத்தின் பக்கம் ஈர்க்கும் முயற்சியாக அமைந்திருந்தது.

**புனித பவுலின் ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகளும் செயற்பாடுகளும்**

ஸ்டொய்க்கிய மெய்யியலின் இத்தகைய செல்வாக்கிற்கு அப்பால், கிறிஸ்தவத்தின் முதல்நிலை போதனையாளர்களில் ஒருவரான பவுல் ஸ்டொய்க்கிய வழிகாட்டல்களின்

செல்வாக்கிற்கு உள்ளாகியிருந்தார் என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது. கிரேக்க உரோம பிரதேசங்களில் வாழ்ந்த யூதர்கள் அல்லாதவர்கள் மத்தியில் யூத பின்னணியில் உருவாகிய கிறிஸ்தவத்தை பரப்புவதில் இவருடைய பங்களிப்பு முக்கியத்துவமுடையதாகும். ஆரம்ப கட்டங்களில் கிரேக்க, உரோம பிராந்தியங்களுக்கு மத பரப்புனராகவும், போதகராகவும் பிரயாணங்களை மேற்கொண்டுள்ளார். ஒரு புதிய சமயத்தை பரப்புகின்ற நோக்குடன் குறித்த பிரதேசத்தில் பயணித்த புனிதர் பவுலிற்கு ஏற்கனவே அங்கிருந்த மக்களது வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொண்டிருந்த மெய்யியல் பள்ளிகள் தொடர்பில் அறிந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது. இது ஸ்டொய்க்கிய மெய்யியல் வழிகாட்டல்கள், அதன் அணுகுமுறைகள் தொடர்பாக அறிந்து செயற்படுவதற்குரிய தேவையினையும் ஏற்படுத்தியது (Grant, 1915: 274). இக் காலத்தில் தனிப்பட்ட போதனைகள், பிரசங்கங்கள், கடிதங்கள் என்பன ஊடாக கிறிஸ்தவ போதனைகள் பரப்பப்பட்டுள்ளன. இவற்றில் பவுல் அவர்கள் உரோமின் ஆட்சியின் கீழ் வாழ்ந்த பொது மக்களை இலக்காகக் கொண்டு எழுதப்பட்ட மேற்குறித்த கடிதங்கள் (Philippians, Galatians, Romans ஆகிய சமூகத்தினருக்கு) கவனத்திற்குரியவையாக அமைகின்றன. ஏற்கனவே ஸ்டொய்க்கிய வழிகாட்டல்களில் அறிமுகத்தைக்கொண்டிருந்த மக்களுக்கு அதன் பின்னணியிலேயே கிறிஸ்தவ போதனைகளை எடுத்துச் சென்றமையினை இந்த கடிதங்கள் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது (Thorsteinsson, 2010: 39).

இக் காரணத்தையிட்டு அதாவது பிரபலமாக இருந்த குறிப்பிட்ட ஸ்டொய்க்கிய கருத்துக்களை தன்னுடைய சொந்த தகவல்களை பரப்புவதற்காக ஊடகமாக பயன்படுத்திகொண்ட வகையில் பவுல் ஒருவகையான ஆன்மீக அரசியல் செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளார் என்று வர்ணிக்கப்படுகின்றது (Pedersen, 2006: 164). ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் ஸ்டொய்க்கிய மெய்யியல் முன்வைக்கும் விடயங்களை பயன்படுத்துகின்றேன் என்பதற்கு எந்தவொரு குறிப்புக்களையும் அவர் பதிவுசெய்யவில்லை. ஆனால் ஸ்டொய்க்கிய அணுகுமுறைகள், சொல்லாடல்கள், எண்ணக்கருக்கள் பரந்தளவில் பவுலினுடைய போதனைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. இக் காரணத்தை முன்னிட்டு இவர் ஸ்டொய்க்கிய ஒழுக்கவியலுடன் இரகசியமான தொடர்பினை பேணியவர் (Crypto-Stoic Ethicist) (Ebbesen, 2004: 108) என வர்ணிக்கப்படுகின்றது. இதனை ஒரு வகையில் ஸ்டொய்க்கிய மெய்யியலுக்கும் கிறிஸ்தவ போதனைகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையாகவும் கருதிக்கொள்ள முடியும். இவ்வொற்றுமைகளை நடுநிலைமனப்பாங்குடன் செயற்படுதல், ஒரு மனிதனுக்கு உண்மையிலேயே உரித்துடைய விடயங்கள் எவை அறிந்து தெளிவுடன் வாழ்தல், ஆசைகள், உணர்ச்சிகளில் இருந்து சுதந்திரமாக வாழ்தல், அடிமைகளை நடத்த வேண்டிய முறை முதலான விடயங்களில் ஒருமித்த கருத்தினை காண முடிகின்றது (Wilson, 2004: 2016-217, Rasimus, Pedersen, & Denderberg 2010: 47).

பேகனிய சமயம் பின்பற்றப்பட்ட உரோமில் கீழ்த்தட்டு மக்கள் குறிப்பாக அடிமைகளும், அடிமைகளாக இருந்து விடுதலை பெற்றவர்களும் அதிகளவில் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறினார்கள். நல்வாழ்க்கைக்கான வழிகாட்டலாக செயற்பட்ட ஸ்டொய்க்கிய மெய்யியலின் இடம் கிறிஸ்தவத்தால் கைப்பற்றப்பட்டு விரிவடைய ஆரம்பித்திருந்தது. கிறிஸ்தவத்தில் நம்பிக்கையுடன் பின்பற்றப்படுவதற்குரிய ஒருவராக மக்களது நலனுக்காக தன்னையே அர்ப்பணித்த இயேசு கிறிஸ்து முன்னிலைப்படுத்தப்பட்டார். ஸ்டொய்க்கிய மெய்யியலில் ஒரு மனிதன் தன்னுடைய ஒழுக்க முன்னேற்றத்திற்காக பொருத்தமான ஞானமுடைய மனிதர் ஒருவரை தேர்வுசெய்து பின்பற்ற வேண்டும் என்ற வழிகாட்டல் இங்கு கவனத்திற்குரியதாகின்றது. ஞானமுடைய மனிதராக சோக்கிரடீஸ் கருதப்பட்டு பின்பற்றப்பட்ட நிலையில் கிறிஸ்தவத்தில் அது இயேசுகிறிஸ்துவிற்கு வழங்கப்பட்டது (Thorsteinsson, 2010: 151). நீங்கள் ஒழுக்க முன்னேற்றத்தில் சோக்கிரடீசாக மாற முடியாது என்பது உண்மையாக இருந்தாலும் சோக்கிரடீசைப்போன்று மாறுவதற்கு முயற்சிக்கின்ற ஒருவராக விழிப்புணர்வுடன் செயற்படுங்கள் (எபிக்டெடசின் கையேடு 51.3) என்ற ஸ்டொய்க்கிய போதனையும் இயேசு கிறிஸ்துவிற்கு விசுவாசமானவராக அவரை பின்பற்றி நடந்துகொள்ளுங்கள் (Romans 12.1) என்ற கிறிஸ்தவ போதனையும், புனித பவுலினுடைய போதனையாகிய ஒரு மனிதன் ஒழுக்க ரீதியான உருமாற்றத்தின் ஊடாக இயேசு கிறிஸ்துவைப்போன்று மாற வேண்டும் என்பதும் ஒருமித்த தன்மையைக் கொண்டிருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

கிறிஸ்துவின் வாழ்க்கையை பின்பற்றிய வகையில் புனித பவுலினால் ‘அன்பு’ அடிப்படையான ஒழுக்கப் பண்பாக முன்வைக்கப்பட்டது (Cardinal Virtue). இதனடிப்படையிலேயே ‘உன்னைப்போல உன் அயலவனை நேசி’ என்ற வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டது. ‘அன்பினைத்தவிர வேறு எதுவும் இறைவனை மகிழ்விப்பது இல்லை’ (Clemson. 49.5), அனைத்திற்கும் மேலான மற்றவர்கள் தொடர்பில் மாறாததுதம் தீவிரமானதுமான அன்பை வெளிப்படுத்துங்கள் ஏனெனில் அன்பு ஒன்றே அனைத்து பாவங்களை நீக்குவதாக உள்ளது (1 Peter 4.8) என்ற பதிவுகள் இதனை அடிப்படையாகக் கொண்டவையேயாகும். அன்பின் உள்ளேயே மன்னித்தல், உதவுதல், மரியாதை செய்தல், உபசரித்தல் என்ற அனைத்தும் உள்ளடங்குகின்றன (Thorsteinsson, 2010: 157). ஆனால் அடிப்படையான ஒழுக்கப் பண்பாக அன்பு உள்ளடக்கப்படாவிட்டாலும் எதிர்கொள்கின்ற ஒவ்வொருவரையும் இதமாகவும், மரியாதையுடனும் கையாள்வதற்கு அடிப்படையான ஒழுக்கப் பண்புகளுடன் அன்பு செலுத்தவும் பழகிக்கொள்வது உதவுகின்றது என்பது உரோமப் பேரரசரும், ஸ்டொய்க்கிய மெய்யியலாளருமான மார்க்கஸ் அரேலியசினால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது (சுய-தியானங்கள் VII.63). அத்துடன் உங்களால் முடியுமானால் பிற மனிதர்கள் தங்களது தீய செயற்பாடுகளில் இருந்து திரும்புவதற்காக அவர்களுக்கு உரிய கற்பிதங்களைச் செய்யுங்கள். அது வெற்றிபெறவில்லை என்றால் அந்த சூழ்நிலையில் அன்பாக செயற்படுவது ஒன்றே பொருத்தமானது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். அன்பு செலுத்துதல் ஒன்றே மற்றவர்களை மாற்றுவதற்கான வழியாகும் என்பதனை அறிந்துகொள்ளுங்கள். கடவுள்களும்

அத்தகைய மக்களுக்கு அன்புகாட்டினார்கள், அவர்கள் சிறந்தவர்களாக மாறுவதற்கு வாய்ப்புக்களை வழங்கினார்கள். நீங்களும் இதனை மேற்கொள்ள முடியும் (சுய-தியானங்கள் IX.11), யாரேனும் ஒருவர் தவறு செய்திருந்தால் அவரை அன்பான வகையில் திருத்துவதற்கு முயற்சி செய்யுங்கள் (சுய-தியானங்கள் X.4), அன்பு அனைத்து தடைகளையும் வென்றுவிடக்கூடியதாக உள்ளது (சுய-தியானங்கள் X.21) என்ற அவருடைய வழிகாட்டல்களும் கவனத்தில் கொள்ளத்தக்கவையாகும்.

இவற்றுடன் புனித பவுலுடைய போதனைகளை ஸ்டொய்க்கிய வழிகாட்டல்களுடன் தொடர்புபட்ட வகையில் விளங்கிக்கொள்ள முடியுமாக உள்ளது. உதாரணமாக எங்களை துன்பத்துக்கு உள்ளாக்குபவர்கள், தவறு செய்பவர்கள் அறியாமை காரணமாகவே அதனை மேற்கொள்கின்றார்கள். இந்த உண்மையை அறிந்துள்ள நிலையில் அவர்கள் தொடர்பில் வெறுப்புக்கொள்வதோ, தண்டனைக்கு உள்ளாக்குவதோ, அவர்கள் செய்ததை மீண்டும் அவர்களுக்கே திருப்பி செய்வதோ பொருத்தமுடையது அல்ல மாறாக அவர்கள் திருந்தக்கூடிய வகையில் குறித்த விடயங்களை எடுத்துரைப்பதே சிறந்த செயலாகும் (செனேகாவின் ஒரு ஸ்டொய்க்கிய மெய்யியலாளனிடமிருந்தான கடிதங்கள் : 20), ஒருவர் உங்களுக்கு செய்த தீமையினை திரும்பவும் அவருக்கு செய்யாமல் இருப்பதே மிகச்சிறந்த பலிவாங்குதலாகும் (சுய-தியானங்கள் XII.7) என்ற ஸ்டொய்க்கிய வழிகாட்டல்களை குறிப்பிட முடியும். இவற்றுடன் ஸ்டொய்க்கிய மெய்யியலில் பயன்பாட்டில் இருந்த பல்வேறு சொற்களும், எண்ணக்கருக்களும் ஆரம்பநிலை கிறிஸ்தவத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஆன்மா, உள்ளுணர்வு, பிரபஞ்ச ஆற்றல், ஒழுக்கம், சுய-தன்நிறைவு, பேச்சுச்சுதந்திரம், அறிவார்ந்தமான சேவை, சுய பரிசோதனை, மனித நேயம், தெய்வீக ஆற்றலுடன் மனிதர்களுக்கான தொடர்பு, உலகியல் பெறுமானங்களை மறுத்தல், உள்ளார்ந்த சுதந்திரத்தை முன்னிலைப்படுத்துதல், புறச்சூழ்நிலைகளின் தாக்கத்திற்கு உள்ளாகாதிருத்தல், மனிதர்களிடையே சமத்துவம் என்பவற்றினை உதாரணமாகக் குறிப்பிட முடியும் (Ferguson, 1993: 347).

தொடர்ந்து நோக்குகின்றபோது, புனிதர் பவுல் இவ்வுலக உருவாக்கத்தையும், இயக்கத்தையும் அணுகியுள்ள விதம் ஸ்டொய்க்கிய உலகநோக்கின் அடிப்படையில் உள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இந்த பிரபஞ்சம் தர்க்கரீதியான ஒரு ஒழுங்கமைப்பில் இயங்கிக்கொண்டுள்ளது. இதில் முழுமையின் நன்மையை இலக்காகக் கொண்டு அனைத்தும் நிகழ்கின்றன. மனிதர்களது பார்வையில் சில விடயங்கள் முரண்பாடானவையாகவும், ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் தோன்றினாலும் முழுமையின் நோக்கில் அவை தர்க்க ஏற்புடைமை கொண்டவையேயாகும். இதனை புரிந்துகொண்டு இயற்கைக்கு இசைவாக செயற்படுவதே மனிதர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்காக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாக உள்ளது முதலானவை ஸ்டொய்க்கிய அணுகுமுறையாக அமைகின்றன. குறித்த விடயங்களை ஏற்றுக்கொண்டு அவற்றுடன்

இவ்வாறான உலக உருவாக்கமும், இயக்கமும் இறைவனால் உருவாக்கப்பட்டது. அந்த உலகில் நிகழ்கின்ற அனைத்தும் இறைவன்மீது நம்பிக்கை வைத்து நிகழ்த்தப்பட வேண்டும் என்ற கருத்தினை பவுல் மேலதிகமாக இணைப்பு செய்துள்ளார் (Grant, 1915: 277). ஆனால் கூர்ந்து நோக்குகின்றபோது பவுலினால் மேற்கொள்ளப்பட்ட இணைப்புக்கள் ஏற்கனவே எபிக்டெடசினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களாகவே உள்ளன. இந்த ஸ்டொய்க்கிய பிரபஞ்ச நோக்கினை பின்வருமாறு சாராம்சப்படுத்த முடியும்; கடவுளது (God) இயல்பின் வெளிப்பாடாக அமையும் அமையும் தெய்வீக ஆற்றல் (Logos) இந்த பிரபஞ்ச கட்டமைப்பை ஊடுருவி வழிநடாத்தும் சக்தியாக உள்ளது. இந்த ஆற்றல் ஒரு விரிவான தெய்வீக ஒழுங்கினை நிலைநிறுத்தியுள்ளது, இதில் பௌதீக கூறுகள், நிகழ்வுகள், பிரபஞ்ச உயிரினங்கள் என அனைத்தும் நுணுக்கமான வகையில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. இந்த இணைவு பகுத்தறிவுபூர்வமானதாகவும் (rational) நோக்கம் கொண்டதாகவும் (purposeful) அமைந்துள்ளது. இந்த முன்நிர்ணயிக்கப்பட்ட இணைவுகளும், முன்நிர்ணயிக்கப்பட்ட நிகழ்வுகளும் பிரபஞ்ச இயக்கமும் ஒன்றிணைந்த வகையில் விதி (fate) என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறான பிரபஞ்ச இயக்கம் இறையாற்றலினால் தான்தோன்றித்தனமாக ஏற்படுத்தப்பட்டது அல்ல மாறாக அதன் பின்னால் மனித வாழ்க்கை குறித்த நல்லெண்ணம் உள்ளடங்கியுள்ளது. அதாவது மனிதர்களினால் மாற்றமுடியாததாக, துன்பத்தை ஏற்படுத்துபவையாக, சாதகமற்றவையாக தோன்றுகின்ற உலக நிகழ்வுகள் அனைத்தினதும் பின்னணியில் மிகப்பெரிய, அறிவார்ந்தமான, நல்ல திட்டம் உள்ளது. இவ்வாறு அனைத்தும் நல்லதற்காகவே நிகழ்கின்றது என்பது 'இயற்கைப் பாதுகாப்பின் தெய்வீக திட்டம்' (Providence) என்று குறிப்பிடப்படுகின்றது (எபிக்டெடசின் கையேடு மற்றும் சொற்பொழிவுகள் நூல்களை அடிப்படையாகக் கொண்ட சாராம்சம்)

மேலும் காண்கின்றபோது, அடிப்படையான ஒழுக்கப்பண்புகளே பின்பற்றப்படுவதற்குரியவை என்பதனை வலியுறுத்துகின்ற ஸ்டொய்க்கிய மெய்யியல் இவ்வுலகில் இன்பத்திற்குரியதாக நுகரப்படுகின்ற புறப்பொருற்கள் பற்றற்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரியவை என்று நெறிப்படுத்துகின்றது. தனிமனிதர்கள் சுயத்தை மையப்படுத்தி அனைத்து மாற்றங்களையும் தங்களிடம் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். புறவுலகில் நிகழ்கின்ற எந்தவொன்று தொடர்பிலும் கவலை கொள்ள வேண்டியது இல்லை. பிற மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற துன்பங்கள் பொறுமையுடன் கையாளப்பட வேண்டும். எந்தவொரு செயற்பாடும் ஞானம், தைரியம், நீதி, தன்னடக்கம் என்ற பண்புகளின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பவை இதன் பிரதான நிலைப்பாடுகளாக உள்ளன. இதனையே மார்க்கஸ் அரேலியஸ் பிற மனிதர்களது தவறுகள் தொடர்பில் கனிவுடன் நடந்துகொள்ளுங்கள் ஆனால் உங்களது விடயத்தில் கண்டிப்புடன் நடந்துகொள்ளுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பிற மனிதர்களுடன் நடந்துகொள்வதற்கு அவர்கள் மீது அன்பு செலுத்தப்படுவது அவசியமானது என்பதனை பவுல் இணைப்புச் செய்கின்றார். இதன் அடிப்படையிலேயே அன்பு (Love) என்பதனை அடிப்படையான ஒழுக்கப்பண்புகளில் ஒன்றாக அவர் கட்டமைக்கின்றார்.

இதன்பொருட்டு இயேசு கிறிஸ்து மனிதர்கள் மீது கொண்ட அன்பினாலேயே அவர்களது பாவங்களை மன்னித்து தண்டனையை தான் ஏற்றுக்கொண்டார். ஒருவர் இயேசு மீது அன்பு செலுத்துவது என்பது இயேசு நேசிக்கின்ற பிற மனிதர்களை நேசிப்பதன் ஊடாகவே சாத்தியமாகின்றது என்று கட்டமைப்பு செய்கின்றார். இவ்வாறு தான் போதித்த மெய்யியல் கொள்கைகளுக்காக உயிர் துறந்தவராக மெய்யியலின் மாவீரர் என்ற அளவில் கிரேக்க உரோமன் சமூகத்தில் மெய்யியலாளர்களால் போற்றப்பட்ட சோக்கிரடீசின் இடம் மனிதர்கள்மீது கொண்ட அன்பு காரணமாக தன்னை அர்ப்பணித்த இயேசு கிறிஸ்துவிற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இதில் இயேசு இறைவனின் குமாரன், தான் நேசித்த மக்களுக்காக துன்பப்பட்டு மரித்தார், உயிர்த்தெழுந்தார் போன்ற கருத்துக்கள் அவர் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரிய வாய்ப்பினை உருவாக்கியது. குறிப்பாக நம்பிக்கையின் வீரர் (Hero of Hope) (Grant, 1915: 278) என்ற அந்தஸ்து அவருக்கு வழங்கப்பட்டது. அதாவது பிற மனிதர்களுடைய பாவங்களை தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய, பாவங்களை போக்கக்கூடிய, பிறருக்காக உயிரையும் அர்ப்பணிக்கக்கூடிய ஒருவர் என்ற அந்தஸ்தாக அது இருந்தது.

இப்பிரபஞ்ச ஒழுங்கில் மனிதர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகள், துன்பங்கள் வலிகள் என்பவை அவர்கள் தங்களை ஒழுக்கரீதியாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்களாக அமைகின்றன. சவால்கள் வாழ்க்கையின் இயல்பான பகுதிகள், வாழ்வதற்கு விரும்புகின்ற ஒருவர் துன்பங்களை எதிர்கொள்வதற்கும் தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு எதிர்கொள்வதன் முதலாவது நிலை எவ்விடயங்கள் தங்களது கட்டுப்பாட்டில் இல்லை என்பதனை அறிந்து அவற்றினை உள்ளது உள்ளபடி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனநிலையினை பெறுவதாகும். இந்த மனநிலையே சவால்களை எதிர்கொள்வதற்கும், மீள்எழுச்சி பெற்று செயற்படுவதற்குமான வாய்ப்பினை உருவாக்குகின்றது என்பன ஸ்டொய்க்கிய மெய்யியலின் வெளிப்படுத்தல்களாக உள்ளன. இவற்றுடன் உடன்பாடான வகையில் துன்பங்களை எதிர்கொள்வதற்கான வழிமுறை இறை ஆற்றலில் நம்பிக்கை வைத்து செயற்படுவதே, சர்வ வல்லமை கொண்டவரான இறைவன் மனிதர்களை நேசிப்பவராக உள்ள நிலையில் அவர்களை மீட்பவராக உள்ளார் என்ற வகையில் புனிதர் பவுலினுடைய போதனைகள் அமைந்திருந்தன. இங்கு புறவுலகம் பகுத்தறிவுபூர்வமாக புரிந்துகொள்ளப்பட்டு அதில் மனித வாழ்க்கை கட்டமைக்கப்பட வேண்டும் என்ற ஸ்டொய்க்கிய வழிகாட்டல் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு மறுவுலக வாழ்க்கையையும் இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும் என்று ஆரம்பநிலை கிறிஸ்தவத்தில் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. நம்பிக்கை என்பது உணர்வுசார்ந்த விடயம் என்ற அடிப்படையில் பெரும் சனத்தொகைக்கு அதனை பின்பற்றுவது இலகுவானதாகவே அமைந்திருந்தது. இவ் விடயத்தில் புனித பவுல் கீழ்நிலைப்பட்ட பெருந்திரள் மக்களின் உளவியலை புரிந்துகொண்டவராக செயற்பட்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

பிரபஞ்சத்துவம் அல்லது பிரபஞ்சமனிதன் என்பதனை மேலைத்தேய மெய்யியலில் அறிமுகம் செய்தவர்களாக ஸ்டொய்க்கிய மெய்யியலாளர்கள் அறியப்படுகின்றனர். இந்த கோட்பாடு கிரேக்க மொழியில் *oikeiosis* என்று அறியப்படுகின்றது. இது வீடு (House) என்பதனைக் குறிக்கும் oikos எனும் கிரேக்கச் சொல்லடியினை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. “அந்நியமான விடயங்களுடன் பரிச்சயமாகிக்கொள்ளுதல்” என்றும் பொருள்கொள்ளப்படுகின்ற இது ‘ஒருவர் தனக்கு முன்னர் அறிமுகம் இல்லாதவர்களையும் தன்னுடைய உறவினர் என்ற அடிப்படையிலேயே அணுக வேண்டும், மற்றவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும்போது அவ்விடத்தில் தான் இருந்தால் எவ்வாறான உணர்வினைக் கொண்டு செயற்படுவேன் என்ற அடிப்படைகளில் நோக்க வேண்டும்’ என்ற வழிகாட்டல்களை முன்வைக்கின்றது (Pigliucci, 2017: 46). உதாரணமாக இது ஒருவருடைய சொந்த வீட்டில் இரத்தஉறவுகள், திருமணஉறவுகள், வேறு குடும்ப உறவுகள் என்பவற்றின் ஊடாக உறுப்பினர்களாக உள்ளவர்களை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இக் குடும்பக்கட்டமைப்பில் ஒவ்வொருவரும் பிறர் ஒவ்வொருவருக்கும் உடமையானவராகவும், பொறுப்பானவராகவும் உள்ளனர். இங்கு ஒருவர் தன்னை அறிந்துகொள்வதும், வளர்வதும் பிறருடன் ஏற்படுத்திக்கொண்ட உறவினை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றது.

இந்த அறிவார்ந்த கட்டமைப்பினை புரிந்துகொண்டு பொருத்தமான நடத்தையினை வெளிப்படுத்துவதற்கு அனைவரும் கடமைப்பட்டவர்களாக உள்ளனர். இந்த பொருத்தமான நடத்தை என்பது குடும்ப கட்டமைப்பிற்கான இயற்கையான நடத்தையாகும். இது குடும்பம் என்ற இயற்கையுடன் இசைந்து நடந்துகொள்ளுதல் என்று புரிந்துகொள்ளப்பட முடியும். இந்த அடிப்படையினைக்கொண்டு ஒவ்வொருவரும் தங்களுடைய சமூகத்தில் உள்ளவர்களுடனும் தொடர்பில் உள்ளனர், தங்கியுள்ளனர் என்றும் அந்த வகையில் சமூகத்துடனும் பொருத்தமான வகையில் நடந்துகொள்வது அவசியமானது என்றும் இந்த கொள்கை விபரிக்கின்றது. இவ்வாறான நடத்தையின் உருவாக்கமே சமூகத்தில் நீதியின் உருவாக்கத்திற்கும், நிலைத்திருப்பதற்கும் பங்களிப்பு செய்வதாக உள்ளது. இவ்வாறு நீதியான சமூகத்தின் உருவாக்கத்தில் ஒவ்வொருவரும் பங்களிப்பு செய்பவர்களாக உள்ளனர். இதுவே ஒழுக்கரீதியான நல்வாழ்க்கையின் அடித்தளமாக உள்ளது (Richter, 2011: 73-78, & Ramelli, 2009: 37-42). இந்த நிலைப்பாடே ‘ஸ்டொய்க்கிய பிரபஞ்சத்துவம்’ (Stoic Cosmopolitanism) என்று குறிப்பிடப்படுகின்றது. இவ் விடயத்தில் பிரபஞ்சத்தில் அனைத்து மனிதர்களும் சமத்துவமானவர்கள் என்ற விடயம் புனிதர் பவுல் இனால் மிகவும் சாதுர்யமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர் கலட்டியன்களுக்கான பிரசங்க கடிதங்களில் ஒன்றில் ‘இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அன்பு செலுத்துகின்றவர்கள் யூதர்களா அல்லது கிரேக்கர்களா, அடிமைகளா அல்லது சுதந்திரமான மனிதர்களா, ஆண்களா அல்லது பெண்களா என வேறுபாடு இன்றி சமத்துவமான நிலையினை அடைகின்றனர், இயேசுவின் முன்னர் அனைவரும் ஒன்றே’ (Galatians 3:28) என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயமானது கிறிஸ்தவ மதத்தின் உள்ளே யூதர்கள் அல்லாதவர்களையும் இணைத்து அதனை பரவலாக்கும் முயற்சிக்கு மிகப்பெரும் வெற்றியை பெற்றுத்தந்தது என்பது வெளிப்படையாகும்.

மனித செயற்பாடுகளை ஒழுக்கரீதியாக ஏற்புடையவை, ஒழுக்கரீதியாக ஏற்புடைமையற்றவை அல்லது தீயவை, அலட்சியத்திற்குரியவை என மூன்று நிலைகளில் ஸ்டொய்க்கிய மெய்யியல் பிரிக்கின்றது. முதலாவது வகையில் ஞானம் அல்லது அறிவுடைமை, தைரியம், நீதி, தன்னடக்கம் என்ற அடிப்படையான ஒழுக்கப்பண்புகளும், இரண்டாவது வகையில் அவற்றுக்கு எதிரான அறியாமை, கோழைத்தனம், அநீதி, அடக்கமின்மை என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது. அலட்சியத்திற்குரியவை என்பது கிரேக்க மொழியில் *adiaphora* என்று குறிக்கப்படுகின்றது. இது ஆங்கிலத்தில் (Indifference) என்று குறிக்கப்படுகின்றது. இவற்றில் செல்வவளம், வறுமை, அழகு, அவலட்சணம், அதிகாரம், பதவி, ஆரோக்கியம், நோய், வாழ்வு, மரணம், புகழ், இகழ்ச்சி என்று குறிப்பிடப்படும் விடயங்கள் உள்ளடங்குகின்றன. இவை மனிதர்களது சுயகட்டுப்படுத்தலுக்கு அப்பாற்பட்டவை என்பதனால் அவற்றினை உள்ளது உள்ளபடி ஏற்றுக்கொள்ள வேண்டும், பற்றற்ற வகையில் தொடர்பினை பேண வேண்டும் என்பதாக ஸ்டொய்க்கிய வழிகாட்டல்கள் உள்ளன. இந்த அலட்சியத்திற்குரியவை என்ற சொல்லாட்சி புனிதர் பவுல் இனால் உள்வாங்கப்பட்டு மாறுபட்ட கலாசார பின்னணிகளை, பழக்கவழக்கங்களை கொண்ட மக்களை ஒன்றினைக்கும் வகையில் மிகவும் சாதுர்யமாக பயன்படுத்தப்பட்டுள்ளமையினை கவனிக்க முடிகின்றது. இதன்படி இறைவன்மீது விசுவாசம் கொண்டு அன்பு செலுத்துவதும், பிற மனிதர்களுடன் சகோதாரத்துடன் நடந்துகொள்வதுமே கவனத்திற்குரிய, ஒழுக்க ரீதியாக ஏற்புடைய செயல்கள் என்றும் மாமிசம் உண்தல். சடங்குகளை பேணுதல், விரதங்களை கடைப்பிடித்தல் முதலானவை கவனத்திற்குரியவை அல்ல, அவை ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளப்படுவதற்குரியவை அல்ல, அலட்சியத்திற்குரியவை என்று தன்னுடைய நெறிப்படுத்தலை மேற்கொண்டுள்ளார். இது கிரேக்க உரோம கலாசாரத்தில் ஏற்கனவே பரீட்சயமாகியிருந்த சொல்லாடல்களை தன்னுடைய கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காக பவுல் மேற்கொண்ட ஒரு முயற்சியாகவே நோக்க முடிகின்றது (Pedersen, 2004: 78).

இறைவனுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளுதல், பக்தியை வெளிப்படுத்துதல் என்பன மூடநம்பிக்கைகள், சடங்கு ஆச்சாரங்களில் இருந்து நீங்கியதாக அறிவார்ந்தமாக ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பது ஸ்டொய்க்கிய நிலைப்பாடாகும். நல்லொழுக்கம் உள்ள மனிதர்களாக வாழ்வதே இறைவனை மகிழ்சிப்படுத்துகின்ற வழியாகும். கடவுளின் நல்ல பண்புகளை அறிந்துகொள்வது என்பது அவை பற்றி போற்றி புகழ்வதற்கும், பெருமைகொள்வதற்கும் அல்ல மாறாக அந்த பண்புகளை தம்மிடம் வளர்த்துக்கொள்வதன் ஊடாக மேன்மையான நிலையை அடைவதற்கேயாகும். பருத்த விலங்குகளை பலியிடுதல், பொன் ஆபரணங்களை சிலைகளில் தொங்கவிடுதல், பொற்காசுகளை பொழிதல் என்பன இறைவனை மகிழ்விப்பதற்குரிய வழிகள் அல்ல என்பது ஸ்டொய்க்கிய ஒழுக்கவியலில்

இறைவன் அணுகப்படும் விதமாக உள்ளது. அத்துடன் ‘அனைத்திலும் மிகவும் மோசமான தற்பெருமை நீங்கள் பக்தி கொண்டவர் என்று காட்டிக்கொள்வதேயாகும் என்பதனை ஞாபகத்தில் கொள்ளுங்கள்’ என்பது மார்க்கஸ் அரேலியசின் கருத்தாக உள்ளது (சுய-தியானங்கள் 12.27). இவ்விடயங்கள் உள்ளது உள்ளபடி புனிதர் போலினாலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட வகையான வாழ்க்கை முறையினை வாழ்வதே மிகவும் முக்கியமான வழிபாட்டு முறை என்பது அவருடைய வெளிப்படுத்தலாக உள்ளது. இதில் ஒவ்வொருவரும் தங்களை காணிக்கையாக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. உயிருள்ள தியாகமாக அதுவே இறைவனால் வேண்டப்படுகின்றது (Thorsteinsson, 2010: 137). இங்கு வேறுபடுகின்ற விடயம் என்னவெனில் இறைவனுக்கு விசுவாசமாக செயற்படுவதன் ஊடாக மறுமையில் நற்பேறு பெற முடியும் என்று பவுலினால் வலியுறுத்தப்படுகின்றது. அதேவேளையில் ஸ்டொய்க்கிய மெய்யியல் இவ்வுலகில் இயற்கையுடன் இசைந்த நல்வாழ்க்கை வாழ்வதனையே முன்நிலைப்படுத்துவதாகும்.

**முடிவுரை**

ஆரம்பநிலை கிறிஸ்தவ செயற்பாடுகளில் குறிப்பாக புனித பவுலினுடைய கிறிஸ்தவ பரப்புரைகளில் அக்கால கிரோக்க உரோம சமூகத்தில் ஒரு வாழ்க்கை முறையாக நிலைபெற்றிருந்த ஸ்டொய்க்கிய மெய்யியல் வழிகாட்டல்கள் ஒரு சட்டகமாக அமைந்திருந்தமையினை அறிந்துகொள்ள முடிகின்றது. மாதிரியாக பின்பற்றப்படுவதற்குரிய தனிநபர் முன்வைப்பில் இருந்து பிரபஞ்ச குடிமகனாக வாழ்வதற்கான வழிகாட்டல்கள் வரைக்கும் பல்வேறு விடயங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. யூதர்கள் அல்லாத பிற இன மக்களை கிறிஸ்தவத்திற்குள் உள்ளீர்க்கும் முயற்சிகளில் அவர்களுக்கு ஏற்கனவே பரீட்சயமாகியிருந்த சொல்லாடல்களையும், எண்ணக்கருக்களையும் பொருத்தமான வகையில் பயன்படுத்தியிருப்பது ஒரு சிறந்த உத்தியாகவே அமைந்துள்ளது. அதேவேளையில் இறையியல் பின்னணியில் அமைந்த கிறிஸ்தவ போதனைகளுக்கும், பகுத்தறிவின் பின்னணியில் அமைந்த ஸ்டொய்க்கிய மெய்யியலுக்கும் இடையில் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். பௌதீக அதீதமான வகையில் இயேசு கிறிஸ்துவை கடவுளின் குமாரனாக ஏற்றுக்கொண்டமை முதற்கொண்டு சாதாரண மனிதர்கள் இறப்பிற்கு பின்னர் மறுவுலக வாழ்வினை பெறுகின்றனர் என்பது வரையில் இவற்றுக்கிடையில் பல வேறுபாடுகள் உள்ளன. நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த இரண்டு விடயங்களுமே கிறிஸ்தவம் மிகப்பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், நிலைத்திருப்பதற்கும் மிகப்பெரும் காரணங்களாக அமைந்திருந்தன என்பதும் கவனத்திற்குரியதாகும்.

ஒரு வாழ்க்கை முறையாக ஸ்டொய்க்கிய மெய்யியல் கொண்டிருந்த வகிபாகத்தை கிறிஸ்தவம் கைப்பற்றிக்கொண்டதும், அது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் முன்னையது கலாசார பின்னணியில் மரபார்ந்த அனுபவங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட

சிந்தனை என்பதும் பின்னையது தெய்வீக அருளினால் வெளிப்படுத்தப்பட்ட அனுபவம் என்பதும் கூட பங்களிப்பு செய்த ஒரு காரணியாக உள்ளது. எவ்வாறாயினும் ஸ்டொய்க்கிய மெய்யியல் வழிகாட்டல்கள் என்று நாம் ஒப்புநோக்குபவை ஏற்கனவே சமூகத்தில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஒரு வாழ்க்கை முறையின் சாராம்சங்களாக அமைகின்ற அதேவேளையில் புனிதர் பவுலின் செயற்பாடுகள் புதியதொரு வாழ்க்கைமுறையினை உருவாக்குகின்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இக் காலத்தில் ஸ்டொய்க்கிய மெய்யியல் எந்தவொரு முறைப்படுத்திய தலைமைத்துவத்தின் கீழும் இயங்கவில்லை. இதனால் கிறிஸ்தவ பிரச்சாரங்களுக்கு எதிராக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்குரிய எந்தவொரு மாற்று வழிமுறைகளையும் பின்பற்றுவதற்குரிய வாய்ப்பும் இருக்கவில்லை. இது தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் ஸ்டொய்க்கிய மெய்யியல் முன்னைய காலங்களில் பெற்றிருந்த செல்வாக்கை இழப்பதற்கு காரணமாக இருந்தது என்று குறிப்பிட முடியும்.

**உசாத்துணைகள்**


Colish, M. L. (1985). The Stoic Tradition from Antiquity to the Early Middle Ages. Vol. 1. Stoicism in Classical Latin Literature. Studies in the History of Christian Thought 34. Leiden: E.J. Brill

Cochran, E.A. (2022). 'Stoicism and Christian Ethics', St AndrewsEncyclopaedia of Theology. Edited by Brendan N. Wolfe et al. https://www.saet.ac.uk/Christianity/ Stoicism and Christian Ethics.

Duignan. B. (2011). Medieval Philosophy_ From 500 to 1500 Ce. USA: Britannica Educational Publishing.

Ebbesen, S. (2004). Where Were the Stoics in the Late Middle Ages? in the S.Strange, J.Zupko Stoicism – Traditions and Transformation (Edi.). pp. 108-132. USA: Cambridge University Press.

Ferguson, E. (1993). Background of Early Christianity. USA: William B. Eerdmans Publishing Company.
Grant, F. C. (1915). St. Paul and Stoicism. The Biblical World, Vol. 45. No.5, pp.268–281. http://www.jstor.org/stable/3142715.

Karamanolis, G. (2022). The Philosophy of Early Christianity. USA: Routledge Publications.

Pigliucci, M. (2017). How to be a Stoic – Using Ancient Philosophy to Live A Modern Life. USA: Basic Books Publications.

Pedersen, T.E. (2014). Stoicism in the Apostle Paul – A Philosophical Reading in the S.Strange, J.Zupko Stoicism – Traditions and Transformation (Edi.). pp. 52-74. USA: Cambridge University Press.

Pedersen, T.E. (2016). Paul’s Stoicizing Politics in Romans 12-13: The Role of 13.1-10 in the Argument in JSNT No. 29. Vol. 2. pp. 163-172. DOI: 10.1177/0142064X06072836.

Ramelli, I. (2009). Hierocles the Stoic: Elements of the Ethics, Fragments, and Excerpts. USA: Society for Biblical Literature.

Rasimus, T., Pedersen, T.E., & Dunderberg, I. (2010). Stoicism in Early Christianity (Edi.). UK: Baker Academic Publishing.

Richter, R.S. (2011). Cosmopolis - imagining community in late classical Athens and the early Roman Empire. USA: Oxford University Press.

Sandbath, F.H. (1989). The Stoics. England: Duckworth Publications.

Thorsteinsson, R.M. (2010). Roman Christianity and Roman Stoicism – A Comparative Study of Ancient Morality. USA: Oxford University Press.

Thorsteinsson, R.M. (2010). Stoicism as a Key to Pauline Ethics in Romans in T.Rasimus, T.E.Pedersen, & I.Dunderberg Stoicism in Early Christianity (Edi.). USA: Baker Academic Publications, pp. 32-55.

Hadot, P. (1999). Philosophy as a Way of Life – Spiritual Exercise from Socrates to Foucault. UK: Blackwell Publications.

Wilson, E. (2014). The Greatest Empire – A Life of Seneca. USA: Oxford University Press.